Registrar of News Paper for India Regn. No. 15261/2005 (R.Dis no.1834/04)




# CVPA NEWS

A Monthly Newspaper (Tamil & English) for Video & Photographic Professionals

AN OFFICIAL NEWS MAGAZINE FROM CHENNAI VIDEO & PHOTOGRAPHER'S ASSOCIATION

Film - 19 Click - 05
AUGUST 2024 Re. 1


**அறிவிப்பு**

நடந்து முடிந்த நமது சங்கத்தின் 14 வது பொது தேர்தலில் வேட்பு மனு தாக்கல் செய்யாத பகுதிகளான, மதுரவாயல் மற்றும் வடபழனி பகுதிகள் நமது சங்க தேர்தல் நடத்திய அதிகாரிகளால் வெற்றிடமாக அறிவிக்கப்பட்டன. தற்போது இந்த பகுதிகளுக்கு சங்க தேர்தல் விதிமுறைகளுக்கு உட்பட்டு மதுரவாயல் மற்றும் வடபழனி பகுதியில் வசிக்கும் சங்க உறுப்பினர்கள் இந்த பகுதிக்கு , பகுதி செயலாளராக சேவை செய்ய விரும்பினால், நமது சங்க அலுவலகத்திற்கு வந்து விண்ணப்பிக்கலாம். உங்கள் விண்ணப்பம் நிர்வாக குழு மற்றும் செயற்குழு முன்னிலையில் பரிசீலிக்கப்பட்ட பின்னர், முடிவுகள் அறிவிக்கப்படும். - CVPA

# அமைதியாக நடந்து முடிந்த CVPA தேர்தல்!

## தேர்தலை சிறப்பாக நடத்திக் கொடுத்த தேர்தல் அதிகாரிகளுக்கு பாராட்டு!

சென்னை வீடியோ மற்றும் புகைப்படக் கலைஞர்கள் சங்கத்தின் 14 வது பொதுத் தேர்தல் மற்றும் 27 வது பொதுக்குழு கூட்டம் சென்னை புரசைவாக்கம் தர்ம பிரகாஷ் திருமண மண்டபத்தில் வெகு சிறப்பாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. தலைவர், செயலாளர், பொருளாளர், பிஆர்ஓ ஆகிய பதவிகளுக்கு இத்தேர்தலில், வழக்கத்தை விட அதிகமான வேட்பாளர்கள் போட்டியிட்டதால் இத்தேர்தல் மிக முக்கியமாக கவனிக்கப்பட்டது. இதனால் இத்தேர்தலில் பரபரப்பிற்கு பஞ்சம் இல்லாமல் காணப்பட்டது. ஆனாலும், எவ்வித பிரச்சனையும் இல்லாமல் தேர்தல் மிகவும் அமைதியாக நடந்து முடிந்தது. தேர்தல் ஏற்பாடுகள் அனைத்தும் அனைவரும் பாராட்டும் படியே இருந்தது. லயன் திரு.விஜயகுமார் அவர்கள் தலைமையில், திரு.விக்னேஷ் குமார் அவர்கள், திரு.எழில் ஆனந்த் அவர்கள், திரு.வெங்கடாஜலபதி அவர்கள், துணைத்தேர்தல் அதிகாரிகளாக இருந்து தேர்தலை வெகு சிறப்பாக அமைதியுடன் நடத்திக் கொடுத்தார்கள். மாநில சங்கத்தின் சார்பாக, கோவையில் இருந்து திரு. மூர்த்தி அவர்கள் பார்வையாளராக வந்து கலந்து கொண்டார்.

இத்தேர்தலில் வாக்களிக்கும் தகுதியை மொத்தம் 1641 சங்க உறுப்பினர்கள் பெற்றிருந்தார்கள். இதில் 1160 சங்க உறுப்பினர்கள் மட்டுமே, தேர்தலில் கலந்து கொண்டு வாக்களித்தார்கள். இவர்கள் அனைவரும் கடைசி வரை பொறுமையுடன் காத்திருந்து தேர்தலில் வாக்களித்தார்கள். சுமார் மாலை 5 மணி வரை வாக்குப்பதிவுகள் நடைபெற்றது. விறுவிறுப்பாக நடைபெற்ற வாக்கு எண்ணிக்கை முடிவுகள் இரவு 9 மணிக்குள் அறிவிக்கப்பட்டன.

முன்னதாக நடைபெற்ற 27வது பொதுக்குழு கூட்டத்தில், கடந்த நிர்வாகத்தின் செயலாளர் திரு. பிரேம்குமார் அவர்களின் செயலாளர் அறிக்கையும், அன்றைய பொருளாளர் திரு. ஜெயபால் அவர்களின் 2023-2024 ஆண்டிற்கான வரவு செலவு கணக்குகளும், இதனுடன் பல்வேறு முக்கிய தீர்மானங்களுக்கும், பொதுக்குழு உறுப்பினர்களின் ஒப்புதல் பெறப்பட்டது. இப்பொதுக்குழு கூட்டத்திற்கு சிறப்பு அழைப்பாளர்களாக, மாநில சங்க பொருளாளர் தர்மபுரி திரு. சுரேஷ் அவர்களும், மாநில அமைப்பாளர் திரு. சரவணன் அவர்களும், மாநில துணைத் தலைவர் திரு.அசோக் அவர்களும் கலந்து கொண்டார்கள். நன்றியுரைக்குப்பின் பொதுக்குழு கூட்டம் இனிதே நிறைவுற்றது.

தேர்தலில் வெற்றி பெற்ற வேட்பாளர்களும், அவர்கள் வாங்கிய வாக்கு களின் விபரங்களும் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.



தலைவர்

**V. புருஷோத்தமன்**

V. புருஷோத்தமன் - 465
R. கார்மேல் நேவிஷ்குமார் - 368
S. செல் செல்வம் - 304
செல்லாதவை - 20
மொத்தம். 1157



செயலாளர்

**P. துரைபாபு**

P. துரைபாபு - 402
DM. பிரேம்குமார் - 379
N. ரவிக்குமார் - 246
Dr.M. கோபி - 79
S. கலியபெருமாள் - 40
செல்லாதவை - 13
மொத்தம் - 1159



பொருளாளர்

**P. கௌரி பார்த்தசாரதி**

P. கௌரி பார்த்தசாரதி - 433
K. ஜெயப்பால் - 405
K. விஜயகுமார் - 307
செல்லாதவை - 15
மொத்தம் - 1160



PRO

**V. பாலச்சந்தர்**

V. பாலச்சந்தர் - 446
R. தனக்கோட்டி - 411
A. ராஜா - 278
செல்லாதவை -18
மொத்தம் - 1153



**R. சீனிவாசன்**

துணைத் தலைவர்
தென் சென்னை - எஸ் -1

R. சீனிவாசன் - 126
V. உமாபதி - 103
செல்லாதவை - 3
மொத்தம் - 232



**J. வீரபாண்டியன் (எ) பாபு**

இணைச் செயலாளர்
தென் சென்னை - எஸ் - 1

J. வீரபாண்டியன் (எ) பாபு - 118
T. செந்தில்குமார் - 58
A. ஜான் நிக்கோலஸ் - 53
செல்லாதவை - 3
மொத்தம் - 232



**K. ஜெயக்குமார்**

துணைத் தலைவர்
தென் சென்னை - எஸ் - 2

K. ஜெயக்குமார் - 147
C. பழனி பவுல்ராஜ் - 127
செல்லாதவை - 8
மொத்தம். - 282



**J. ராதாகிருஷ்ணன்**

இணைச்செயலாளர்
தென் சென்னை எஸ் - 2

J. ராதா கிருஷ்ணன் - 155
M. பெஸ்லிக்கா அந்தோணி - 120
செல்லாதவை - 5
மொத்தம். - 280



**M. வேல்முருகன்**

துணைத் தலைவர்
மத்திய சென்னை

போட்டியின்றி தேர்வு



**A. சீனிவாசன்**

இணைச்செயலாளர்
மத்திய சென்னை

A. சீனிவாசன் - 210
K. கணேஷ் - 74
செல்லாதவை - 3
மொத்தம். - 237



**A. கௌஸ் பாஷா**

துணைத் தலைவர்
வடசென்னை

A.கௌஸ்பாஷா - 183
A. பெரோஸ்கான் - 164
செல்லாதவை - 9
மொத்தம் - 356



**P. பிரபாகரன்**

இணைச் செயலாளர்
வடசென்னை

P. பிரபாகரன் - 174
A. மேகநாதன் - 163
செல்லாதவை - 20
மொத்தம் - 337

### பகுதி செயலாளர்கள் தேர்தலில் பெற்ற வாக்குகள் விபரம்

**தென் சென்னை - எஸ் - 1**

**அசோக் நகர் பகுதி**
S. எழில்ராஜ் - 16
R. கண்ணன் - 7

**தென் சென்னை எஸ் - 2**

**மயிலாப்பூர் பகுதி**
P. ஹரிஹரன் - 30
P. அங்கமுத்து - 15

**குரோம்பேட்டை பகுதி**
E. விஜயகுமார் - 11
A. சீனிவாசன் - 8

**வடசென்னை**

**கொடுங்கையூர் பகுதி**
G. ராஜேஷ் - 20
G. ரமேஷ். - 15

**தண்டையார்பேட்டை பகுதி**
S.மதன் ( எ) மகேந்திரன் - 37
C. ஜெகன்நாதன் - 21

**வண்ணாரப்பேட்டை பகுதி**
N. சுரேஷ்பாபு - 40
J. மதனகோபால் - 31

**திருவொற்றியூர் பகுதி**
ஸ்ரீ திருமலை - 27
G. பாஸ்கர். - 15
G. சீனிவாச ராவ் - 12

**மத்திய சென்னை**

**நுங்கம்பாக்கம் பகுதி**
R.D. விஜய கிருஷ்ணன் - 15
P. கோபாலகிருஷ்ணன் - 11

கடந்த பத்து தேர்தலில் பதிவான மொத்த ஓட்டு/ பதிவான ஓட்டு விவரம்

| | | |
|---|---|---|
| 2006 | 825 | 476 |
| 2008 | 1260 | 783 |
| 2010 | 1719 | 1150 |
| 2012 | 1950 | 1360 |
| 2014 | 850 | 412 |
| 2016 | 1508 | 911 |
| 2018 | 1863 | 1287 |
| 2020 | – | – |
| 2022 | 1813 | 1237 |
| 2024 | 1641 | 1160 |



# நமக்கு நாமே திட்டம்

## செயலாளர் துரைபாபு அவர்களின் கனவு திட்டம்

## ஆயிரம் உறுப்பினர்களை இலக்காகக் கொண்டு செயல்படத் தொடங்கியது!

### ஆரம்பமே அசத்தல்!

புதிய நிர்வாகம் பொறுப்பேற்றுக் கொண்டதும், இதன் முதல் செயற்குழுக் கூட்டம் எஸ்.வி.எஸ் கிளப்பில் நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு நமது சங்க தலைவர் திரு. புருஷோத்தமன் அவர்கள் தலைமை தாங்கினார். செயலாளர் திரு. துரைபாபு அவர்கள் முன்னிலை வகித்தார். ஏனைய சங்க நிர்வாகிகள் மற்றும் செயற்குழு உறுப்பினர்கள் அனைவரும் கலந்து கொண்ட இக்கூட்டத்தில் அடுத்த மூன்று ஆண்டுகளில் நமது சங்க உறுப்பினர்கள் அனைவரும் பயன் அடையும் வகையில் பல்வேறு முக்கிய விஷயங்கள் குறித்து ஆலோசனை செய்யப்பட்டன. குறிப்பாக நமது செயலாளர் துரைபாபு அவர்களின் கனவு திட்டமான எவ்வித காப்பீடும் செய்யாமல் நமக்கு நாமே உதவி செய்து கொள்ளும் ஒரு புதிய திட்டத்தை விரைவாக செயல்படுத்துவது குறித்து ஆலோசனை செய்யப்பட்டு, அவை செயற்குழுவில் ஒப்புதல் பெறப்பட்டு தீர்மானம் நிறைவேற்றியது.

**நமக்கு நாமே திட்டத்தின் விரிவாக்கம்**

★ நமக்கு நாமே திட்டத்தில் ஒருவர் உறுப்பினராக சேர வேண்டும் என்றால், அவர் முதலில் CVPA -ல் கண்டிப்பாக உறுப்பினராக இருக்க வேண்டும்.

★ நமக்கு நாமே திட்டத்தில் உறுப்பினராக சேர்ந்த நாள் முதல், அவர் CVPA-ல் தொடர்ந்து ரினிவல் செய்வது கட்டாயம் ஆக்கப்படுகிறது.

★ நமக்கு நாமே திட்டம் குறைந்தபட்சம் ஆயிரம் உறுப்பினர்களை இணைத்து, அதை ஒரு இலக்காக கொண்டு செயல்படுத்துவதே இத்திட்டத்தின் முதல் நோக்கமாகும்.

★ ஆயிரம் உறுப்பினர்கள் இந்த திட்டத்தில் இணைந்த பிறகு, நமக்கு நாமே திட்டம் செயல்பாட்டிற்கு வரும் பட்சத்தில், நமது கலைஞர்களுக்கு ஏற்படும் துயர விபத்து சம்பவம் மற்றும் இயற்கை மரணங்களுக்கு அவர்களின் குடும்ப வாரிசுதாரர்களுக்கு எவ்வித காப்பீடும் எடுக்காமல் நமக்கு நாமே திட்டத்தின் மூலம் 2 லட்சம் ரூபாய் வரை உடனடியாக வழங்கப்படும். (உறுப்பினர் சேர்க்கைக்கு ஏற்ப இந்த தொகை மாறுபடும்).

★ இத்திட்டத்தில் உங்களை இணைத்துக் கொள்ள ஆயிரம் ரூபாய் முதலில் செலுத்த வேண்டும். இந்த தொகை நலத்திட்ட உதவி தொகையாக வங்கிக் கணக்கில் உடனடியாக வரவு வைக்கப்படும்.

★ இத்திட்டத்தில் இணைந்த, உறுப்பினரின் ஒவ்வொரு இழப்பீட்டிற்கும், நீங்கள் செலுத்திய ஆயிரம் ரூபாய் தொகையில் இருந்து 200 ரூபாய் எடுத்து வழங்கப்படும். இது தவிர இந்தத் திட்டத்தில் உறுப்பினராக சேர்ந்த ஒவ்வொருவரிடமும் 200 ரூபாய் பெறப்பட்டு, சேர்ந்த உறுப்பினர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப இழப்பீடு தொகை வழங்கப்படும்.

★ இவ்வாறு நான்கு உறுப்பினர்கள் (4×200=800) இழப்பீட்டுக்கு பிறகு மீண்டும் நமக்கு நாமே திட்டத்திற்கு 800 ரூபாயை மீண்டும் செலுத்த வேண்டும். இந்த தொகையை மொத்தமாகவோ, அல்லது தவணை முறையாகவோ நீங்கள் செலுத்திக் கொள்ளலாம்.

ஒருவர் எவ்வளவு காலம் ( வயோதிக காலத்திலும்) நமக்கு நாமே திட்டத்திற்கான உதவி தொகையை தொடர்ந்து செலுத்துகிறார்களோ, அவர்களின் குடும்ப வாரிசுதாரர்கள் நமக்கு நாமே திட்டத்தின் பயன்களை கண்டிப்பாக பெற முடியும்.

★ உங்கள் கணக்கில் 200 ரூபாய் மினிமம் பேலன்ஸ் இருக்கும்படி பார்த்துக் கொள்ள வேண்டும்.

★ நமக்கு நாமே திட்டத்தில் உங்களை உறுப்பினராக சேர்த்துக் கொண்டு, உதவி தொகை ஆயிரம் ரூபாய் செலுத்திய நாட்களில் இருந்து, 120 நாட்களுக்குப் பிறகு நமக்கு நாமே திட்டத்தின் பயன்களை நீங்கள் முழுமையாக பெற முடியும்.

★ தற்போது நமக்கு நாமே திட்டம் உடனடியாக செயல்பாட்டிற்கு கொண்டு வரவுள்ளதால், உடனடியாகஆயிரம் உறுப்பினர்களை இணைப்பதே நமது இலக்கு. இதனால் முதல் 120 நாட்களுக்கு மட்டும் 60 வயது உள்ளவர்கள் கூட உறுப்பினராக சேரும் வாய்ப்பை, தவற விட வேண்டாம் என்று கேட்டுக் கொள்ளப்படுகிறது.

★ இது குறித்து மேலும் விபரம் அறிய நமது சங்க **செயலாளர் துரைபாபு** அவர்களின் அலைபேசி எண்ணுக்கு (92821 64723) தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

## திருமதி .கௌரி பார்த்தசாரதி புதிய பொருளாளராக பதவியேற்ற உடன் CVPA-ன் சங்க கட்டட நிதிக்கு 10 லட்ச ரூபாய் வழங்குவதாக அறிவித்தார்!

**ஒரு கோடி ரூபாயில் சங்க கட்டடம் வாங்கப்படும், என்று செயற்குழுவில் செயலாளர் துரைபாபு திட்ட வட்டம்!**

வழக்கமான நடைமுறைகளை பின்பற்றி, தேர்தல் அதிகாரிகள் பதவியேற்பு விழாவை சென்னை அண்ணாசாலை, எஸ்.வி.எஸ் கிளப்பில், ஏற்பாடு செய்திருந்தனர். நமது சங்கத்தின் முன்னாள் நிர்வாகிகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டு அனைவரும் கலந்து கொண்டார்கள். கலைமாமணி யோகா அவர்கள் தலைமையில் பதவி ஏற்பு விழா நடைபெற்றது. புதிய நிர்வாகிகள் மற்றும் செயற்குழு உறுப்பினர்களுக்கு தேர்தல் அதிகாரி திரு. விஜயகுமார் அவர்கள் முன்னிலையில் அனைவரும் உறுதிமொழி எடுத்துக்கொண்டனர். நமது சங்கத்தின் முன்னாள் தலைவர்கள் திரு. ராமகிருஷ்ணன் அவர்கள், திரு. சுந்தரவடிவேலு அவர்கள், திரு. ஸ்ரீதர் அவர்கள், திரு.சரவணன் அவர்கள், சிப்பாட்டா சதாசிவம் அவர்கள்,வெற்றி பெற்றவர்களுக்கு சான்றிதழ் வழங்கி சிறப்பு செய்தார்கள். தலைவர், செயலாளர், பொருளாளர், பீஆர்ஓ,போன்ற முக்கிய பதவிகளை வென்றவர்களை, கடந்த நிர்வாகத்தில் அங்கம் வகித்த, முன்னாள் நிர்வாகிகள், புதிய நிர்வாகிகளை கைகுலுக்கி வரவேற்று, அவர்களை மகிழ்ச்சியுடன் இருக்கையில் அமர வைத்து விட்டு, முன்னால் நிர்வாகிகள் அனைவரும் விடை பெற்றுக் கொண்டார்கள்.

கடந்த சில வருடங்களாக நமது சங்கத்திற்கு சொந்த கட்டடம் வேண்டும் என்பது பெரும்பாலான சங்க உறுப்பினர்களின் கோரிக்கையாக இருந்து வந்தது. இது இந்த தேர்தலில் வாக்குறுதியாகவும் எதிரொலிக்கப்பட்டது. இந்நிலையில் பொருளாளர் பதவிக்கு போட்டியிட்டு வெற்றி பெற்ற வேட்பாளர், திருமதி. கௌரி பார்த்தசாரதி அவர்கள் , தான் பொருளாளராக பதவி ஏற்று கொண்ட அடுத்த சில நிமிடங்களில் CVPA சங்க கட்டடத்திற்காக, என் சொந்த பணத்தில் இருந்து பத்து லட்ச ரூபாய் நிதியாக தருகிறேன். இது என்னை வாழ வைத்த என் தொழிலுக்கு செய்யும் மரியாதையாக நினைத்து செய்கிறேன். என்று அவர் கூறியதும் விழாவிற்கு வந்திருந்த அனைவரும் கரவொலி எழுப்பி தங்கள் மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார்கள். எல்லோரும் மேடை அருகே சென்று திருமதி. கௌரி பார்த்தசாரதி அவர்களை பாராட்டி மகிழ்ந்தார்கள்.

இதனை தொடர்ந்து நடைபெற்ற புதிய நிர்வாகத்தின் முதல் செயற்குழு கூட்டத்தில் திருமதி.கௌரி பார்த்தசாரதி அவர்களுக்கு, நன்றி தெரிவிக்கப்பட்டது. மேலும் இது குறித்து சங்க செயலாளர் துரைபாபு அவர்கள், பேசுகையில் நமது சங்கத் திற்கு சொந்த கட்டடம் ஒரு கோடி ரூபாய் மதிப்பில் வாங்கப்படும் என்கிற அறிவிப்பை செயற்குழுவில் வெளியிட்டார். திருமதி. கௌரி பார்த்தசாரதி அவர்களை தொடர்ந்து, மேலும் சிலர் சங்க கட்டடத்திற்கு நன்கொடை வழங்குவதாக என்னிடம் தெரிவித்துள்ளார்கள். இதை விரைவு படுத்தி எவ்வளவு சீக்கிரம் முடிக்க முடியுமோ அதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படும். நாம் சங்கத்திற்கு வாங்கக்கூடிய இடமானது, சின்ன சின்ன சுப நிகழ்ச்சிகளை நடத்தும் ஒரு மினி ஹாலாக இருக்க வேண்டும் என்று விரும்புகிறோம். இதில் நமது சங்க உறுப்பினர்களும் பயன் பெறும் வகையில் இருக்க வேண்டும் என்பதே இந்த நிர்வாகத்தின் விருப்பமாக உள்ளது. ஒரு கோடி மதிப்புள்ள செ ாந்த கட்டடம் வாங்க திருமதி கௌரி பார்த்தசாரதி அவர்களின் தலைமையில் குழு அமைத்து செயல்பட செயற்குழுவின் ஒப்புதலுடன் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

## 14 வது பொதுத் தேர்தலில் தேர்ந்தெடுக்கப்பட்ட புதிய நிர்வாகத்தின்முதற் செயற்குழு கூட்டம், 17.08.2024 அன்று எஸ்.வி.எஸ் கிளப்பில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட சில முக்கிய தீர்மானங்கள்

**தீர்மானம் 1**

சங்க அலுவலகம் ஒத்திகை(லீஸ்)க்கு விரைவில் செல்வதற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டது சங்கத்திற்கான புதிய கட்டிடம் வாங்க அதற்கான குழு அமைத்து பொருளாளர் அவர்கள் தலைமையில் துரிதமாக செயல்படுத்தப்படும்

**தீர்மானம் 2**

whatsapp குழுக்கள் சீரமைப்பு செய்ய தீர்மானம் நிறைவேற்றப்பட்டது

**தீர்மானம் 3**

ACS மருத்துவக் கல்லூரியில் வாயிலாக நமக்கு வழங்கபடும் மருத்துவ நலம் கார்டு உறுப்பினர்கள் பயன்பெறும் வகையில் துரிதமாக செயல்படுத்த தீர்மானம் நிறைவேற்றப்பட்டது

**தீர்மானம் 4**

மீண்டும் இன்சூரன்ஸ் திட்டம் உறுப்பினர்களுக்கு பயனுள்ளதாக கிடைக்க அதைச் சார்ந்த இன்சூரன்ஸ் கம்பெனியிடம் கேட்டு சரியான முறையில் இன்சூரன்ஸ் கொண்டுவரப்படும்

**தீர்மானம் 5**

உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் ஐடி கார்டு நவீன (DIGITAL)முறையில் வடிவமைக்கப்படும் செலவுகள் அதிகமானால் பழைய முறையே கையாளப்படும்

**தீர்மானம் 6**

நிர்வாகிகள் மற்றும் செயற்குழு உறுப்பினர்களுக்கு 70% வருகை பதிவேடு கட்டாயப்படுத்தப்படும்

**தீர்மானம் 7**

ஒருவருக்கு ஒரு பதவி என்று ஒழுங்குபடுத்தப்படும்

**தீர்மானம் 8**

மாநில சங்கத்திற்கு மாவட்டத்திலிருந்து 30 பேர் கொண்ட பொதுக்குழு உறுப்பினர்களில் முன்னாள் செயலாளர் திரு D.M. பிரேம்குமார் அவர்களுக்கு ஒரு செயற்குழு உறுப்பினர் பொறுப்பு வழங்கப்படும்.

( குறிப்பு: நமது சங்க செயற்குழுவில் பிரேம்குமார் அவர்களுக்கு வழங்கிய, மாநில பொதுக்குழு மற்றும் செயற்குழு உறுப்பினர் பொறுப்பு தந்த சங்க நிர்வாககுழு/ செயற்குழுவிற்கு நன்றி தெரிவித்துக் கொண்டதுடன், தனது பணிச்சுமை காரணமாக இந்த பொறுப்புகளில் இருந்து தன்னை விடுவித்து கொள்வதாக நமது சங்க தலைவர் புருஷோத்தமன் அவர்களிடம் அறிவித்துவிட்டார் )

**தீர்மானம் 9**

185 வது உலக புகைப்பட தினத்தை கொண்டாட தீர்மானித்தது

**தீர்மானம் 10**

வரும் செப்டம்பர் மாதம் மீண்டும் உறுப்பினர் சேர்க்கை நடைபெறும்

45 வயதுக்கு மேற்பட்டோருக்கு நம் சங்கத்தின் புதிய துணை விதிப்படி உறுப்பினர் சேர்க்கை நடைபெறும் அதே நேரத்தில் அவர்களுக்கு சங்கத்தால் வழங்கப்படும் சலுகைகள் கிடைக்கப்பெறாது அவர்கள் கௌரவ உறுப்பினர்களாக தொடர்வார்கள்.

**தீர்மானம் 11**

2018க்கு பின்னர் ரினிவல் விடுபட்டுப் உறுப்பினர்கள் 45 வயதுக்குள் இருந்தால் எந்த நிபந்தனையும் இல்லாமல் உறுப்பினராக இணைத்துக் கொள்ளப்படுவார் 45 வயதுக்கு மேல் உள்ளவர்களாக இருப்பின் புதிய விதிப்படி கௌரவ உறுப்பினராகவே சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்

**தீர்மானம் 12**

இந்த புதிய நிர்வாகத்தின் புதிய திட்டமான நமக்கு நாமே என்ற மிகச் சிறப்பான திட்டத்தை உறுப்பினர்களுக்கு அறிமுகப்படுத்தி விரைவில் அதில் உறுப்பினர்களை சேர்க்க முயல்வது போன்ற முக்கிய தீர்மானங்கள் கடந்த செயற்குழுவில் நிறைவேற்றப்பட்டன.

# CVPA தேர்தலில் வென்றவர்களுக்கு பதவியேற்பு விழா






















நமது சங்கத்தின் ஆயுட்கால உறுப்பினரும் சங்கத்தின் மூத்த உறுப்பினருமான ரத்தி ஸ்டுடியோ **திவேஷ்** அவர்களின் மகன் திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் (சங்க தேர்தலுக்கு முன்பாக நடைபெற்ற திருமண வரவேற்பு நிகழ்ச்சி) நமது சங்கத்தின் இந்நாள் முன்னாள் நிர்வாகிகள் கலந்துகொண்டு மணமக்களை வாழ்த்தினார்கள்.



நமது சங்க உறுப்பினர் **சைதை கண்ணன்** அவர்களின் இல்ல திருமண விழா வரவேற்பு நிகழ்ச்சியில் நமது சங்க தலைவர் புருஷோத்தமன், செயலாளர் துரைபாபு ஆகியோருடன் ஏனைய முன்னாள் இந்நாள் சங்க நிர்வாகிகள் மற்றும் செயற்குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினார்கள்.



நமது சங்க அலுவலகத்தில் புதிய நிர்வாகம் பொறுப்பேற்றுக் கொண்ட பிறகு, **சுதந்திர தினத்தையொட்டி தேசிய கொடியேற்றும் நிகழ்ச்சி சங்க அலுவலகத்தில் நடைபெற்றது.** நமது சங்க தலைவர் புருஷோத்தமன் அவர்களின் தலைமையில் நமது சங்க செயலாளர் துரை பாபு அவர்கள் தேசிய கொடியை ஏற்றி வைத்து அனைவருக்கும் இனிப்பு வழங்கினார்.




நமது சங்க **அலுவலகத்தில் உலக புகைப்பட தினம்** கொண்டாடப்பட்டது. இந்நிகழ்ச்சியில் சங்க நிர்வாகிகளும், செயற்குழு உறுப்பினர்களும் கலந்து கொண்டார்கள்.



மத்திய சென்னை, பட்டாளம் பகுதியை சேர்ந்த புகைப்பட கலைஞர், திரு.அமீர் (அ) அப்துல் வீடியோ அவர்களின் புதிய புதுமனை புகுவிழாவிற்கு நிர்வாகிகள் கலந்து கொண்ட தருணம்

## வருந்துகிறோம்



நமது சங்க உறுப்பினர் **N. ராஜேந்திரன்** அவர்கள் உடல் நலம் பாதிக்கப்பட்டிருந்த நிலையில்,இம் மாதம் இயற்கை எய்தினார். அன்னாரது இறுதி அஞ்சலி நிகழ்ச்சியில் கலந்து கொண்ட சங்க நிர்வாகிகள், நமது சங்கம் சார்பாக அஞ்சலி செலுத்திய பின், நமது சங்க பொதுக்குழு தீர்மானப்படி ஈமச்சடங்கு செய்வதற்காக வழங்கப்படும் 20,000 ரூபாயை சங்க நிர்வாகிகள் அவருடைய வாரிசு தாரர்களிடம் வழங்கினார்கள். அன்னாருடைய ஆன்மா சாந்தி அடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறோம். - CVPA



நமது சங்க உறுப்பினர்கள் பயன் அடையும் வகையில் **ஏ.சி.எஸ் மருத்துவமனை நலம் மருத்துவ காப்பீடு** திட்டத்தை அறிமுகம் செய்து, நமது சங்க உறுப்பினர்களுக்கு வழங்கும்படி நலத்திட்டத்திற்கான அடையாள அட்டையை வழங்கியது. CVPA செயலாளர் திரு.துரைபாபு நலம் திட்டத்திற்கான அட்டையை கடந்த செயற்குழுவில் வெளியிட மாநில சங்க அமைப்பாளர் திரு.சரவணன் அவர்கள் பெற்றுக் கொண்டார்.

## வருந்துகிறோம்



வடசென்னை, திருவொற்றியூர் பகுதியை சேர்ந்த நமது சங்க உறுப்பினர் **D.L. ராஜ்குமார்** அவர்கள் இம் மாதம் இயற்கை எய்தினார். அன்னாரது இறுதி அஞ்சலி நிகழ்ச்சியில் கலந்து கொண்ட நமது சங்க நிர்வாகிகள், சங்கம் சார்பாக அஞ்சலி செலுத்திய பின், நமது சங்க பொதுக்குழு தீர்மானப்படி சங்க உறுப்பினர்களின் குடும்பங்களுக்கு வழங்கப்படும் ஈமச்சடங்கு தொகை (ரெனிவல் அடிப்படையில்) 10,000 ரூபாயை சங்க நிர்வாகிகள் அவருடைய வாரிசுதாரர்களிடம் வழங்கினார்கள். அன்னாருடைய ஆன்மா சாந்தி அடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறோம். - CVPA

**CVPA NEWS** (Tamil & English ) Monthly Newspaper, **RNI No. TNBIL / 2005 / 15261 (R.Dis no.1834/04)**
Published by **B.SRIDAR,** on behalf of
**Chennai Video & Photographers' Association,**
at 51/24, Bangaru Street, Ellis Road, Chennai-2. Ph: 2860 7821 Email : cvpanews2005@gmail.com, Website : www.cvpa.in
Printed by **M.NAVANEETHAN,** at **Nava Jothi Achagam,** No.8. Mukhtharunnissa Begum St, Ellis road, Chennai-2.
Editor : **B.SRIDAR,** Mobile: 8015170351